திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(8) 1981 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

@ 492 ஆம் பக்கத்தில் இணைப்பு X ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

THIRU K. RAMAMOORTHY : Sir, I move the following amendment :—

"In clause 2, *delete* the words 'within a period of seven years and six months' and *insert* the words 'within a period convenient to the State Government'".

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

* **திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய பதிலிலிருந்து ஒன்று தெரிந்தது. இந்தியாவில் எந்தெந்த மாநிலங்களில் தேர்தல்கள் நடைபெறவில்லை என்ற கணக்கை எடுத்ததிலிருந்து இப்போதைக்கு உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதாக இல்லை என்பது அவரை அறியாமலேயே வெளிப்படுகிறது. எனவே என்னுடைய திருத்தம் அவருடைய கருத்துக்கு ஏற்றதாக இருக்கிறதென்று நினைக்கிறேன். எனவே இதை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆந்திர மாநிலத்தில் ஐதராபாத் மாநகராட்சியில் 1966 லிருந்து தேர்தல் நடைபெறவில்லை. அதே நேரத்தில் நமது மாநிலத்தில் சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில், வெகு சீக்கிரமாக நடத்த இருக்கிறோமென்று தெரிவித்து, இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா, திரும்பப் பெறுகிறாரா ?

திரு. க. இராமமூர்த்தி : தலைவஅவர்களே, திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"In clause 2, *delete* the words 'within a period of seven years and six months' and *insert* the words 'within a period convenient to the State Government'".

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

■ திரு. க. இராமமூர்த்தி : அரசு என்னுடைய திருத்தங்களை ஏற்காமல் பிடிவாதம் பிடித்துக்கொண்டிருக்கிற போக்கைக் கண்டித்து நானும், என்னுடைய கட்சியினரும் வெளி நடப்பு செய்கிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. க. இராமமூர்த்தி வெளி நடப்பு செய்தார்)

திரு. ம. சங்காலிங்கம் : இந்த அரசாங்கம் ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை நடத்தாமல், கால நீட்டிப்பு கேட்பதைக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியேறுகிறது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்தத் திருத்தத்தை வழிமொழிந்து பேசிய அளவிலே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வெளியேறுவதென்பது உறுப்பினர்களின் உரிமை. ஆனால் வெளியேறுவதற்கு ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏற்கெனவே இப்படி நடந்திருக்கிறதோ, என்னவோ. வாக்கெடுப்பின்போது வெளிநடப்பு செய்வது நல்லதொரு சம்பிரதாயமல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நான் வெளி நடப்பு செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்பு செய்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ரொம்ப நாள் ஆகிவிட்டது வெளி நடப்பு செய்து.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1981 ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1981) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை காலை 10.30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1.37)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS